**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண்.** 87/2009

2019-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பி.வா.சா.2 (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.S.நசீர், மூன்றாம் நிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிதுரை | சமயம் | : |
| த/பெ | : | | வயது | : |
| கிராமம் | : | | தொழில் | : |
| வட்டம் | : | | மாவட்டம் | : |

---

பி.வா.சா.2-ன் முதல் விசாரணை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். இவ்வழக்கின் வாதி எனது மகன். எனக்கு இரண்டு மகன்கள். இரண்டாவது மகன் பெயர் அண்ணாதுரை. இரண்டாவது மகன் அண்ணாதுரை தற்சமயம் ஊரில் தனியாக உள்ளார். காமராஜ்ம், அண்ணாதுரையும் தனிதனியாகதான் வசித்து வருகிறார்கள். அண்ணாதுரை வெளிநாடு சென்று வந்தாரா என்றால் சென்று வந்தார். 1 வருடம் வெளிநாட்டில் இருந்தார். எந்த வருடம் வெளிநாட்டில் இருந்தார் என்று எனக்கு நினைவில் இல்லை. ஆனால் 1 வருடத்திற்கு முன்பு இருந்தார். அதற்கும் முன்பு 2ம் வாதி வெளிநாடு சென்றாரா என்றால் நினைவில் இல்லை. என்னுடைய சகோதரர்கள் நான், கணேசன், ராஜமாணிக்கம், செல்வராசு ஆகியோர்கள் ஆவார்கள். 2ம் பிரதிவாதி கணேசனின் மகன் ஆவார். 1ம் பிரதிவாதி எனது தம்பியாவார். சண்முகம் ராஜமாணிக்கத்தின் மகனாவார். ராஜமாணிக்கம் தற்சமயம் உயிருடன் இல்லை. மணிவண்ணனின் தந்தையும் உயிருடன் இல்லை. வழக்கு சொத்தை எனது சகோதரர்களுக்குள் நாங்கள் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை. லோகாம்பாள் எனது அம்மா. நான் 3ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு இப்போது படிக்கத் தெரியாது. என்னுடைய கையெழுத்தை பார்த்தால் அதனை சொல்லமுடியாது. பி.வா.சா.ஆ1 ஆதரவில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். 3.12.2013ம் தேதியில் கூத்தூர் கிராமத்தை சேர்ந்த சுப்ரமணியன் மகள் சசிகலா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் கிரையம் நான்

யாருக்கும் கொடுக்கவில்லை. எனது அப்பா சொத்தை எனது இரண்டு மகன்களுக்கும் பிரித்துக் கொடுத்தேன். பி.வா.சா.ஆ2 ஆவணத்தில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். அந்த ஆவணத்தில் கண்டுள்ள பாஸ்கர் என்பவர் கிரையம் வாங்கிய நபர் ஆவார். பாஸ்கர் என்பவருக்கு 13.12.2012ல் ஒரு கிரையம் கொடுத்தேன். அந்த சொத்து எனது தாயார் லோகாம்பாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். லோகாம்பாள் சொத்தை நான்காக பிரித்து அதில் எனது பாகத்தை கிரையம் கொடுத்தேன் என்றால் எனது செலவிற்கு பணம் இல்லாததால் விற்றேன். சசிகலா என்பவர் எனது மருமகள் ஆவார். அவரது கணவருக்கு சேரவேண்டிய பாகத்தை சசிகலாவிற்கு எழுதி கொடுத்தேன். அந்த சொத்து எனது ஐயா சாமிநாத படையாட்சியின் சொத்தாகும். சாமிநாத படையாட்சி, லோகாம்பாள் ஆகியோரின் சொத்துக்களை சேர்த்து எங்கள் சகோதரர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டு அதில் என்னுடைய பங்கை எனது மகன்களுக்கு பாகம் பிரித்துக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது அம்மா இறந்தது 2010 என்று நினைக்கிறேன் சரியாக நினைவில் இல்லை. எனது தாயார் லோகாம்பாள் மற்றும் நான், எனது சகோதரர் கணேசன் மகன் மணிவண்ணன், எனது சகோதரர் செல்வராசு, மற்றொரு சகோதரர் மகன் சண்முகம் நால்வருக்கும் சேர்த்து எனது தாயார் ஒரு பாக உறுதிமொழி பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. சசிகலாவின் கணவர் பெயர் அண்ணாதுரை. என் மனைவி உயிருடன் இல்லை. என் அம்மா லோகாம்பாள் வேலையில் இல்லை. அவருக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் இல்லை. எனது அம்மா இறக்கும்போது சுமார் 80 வயது இருக்கும். இறந்தபோது நாங்கள் எல்லோரும் சென்றுதான் காரியம் பார்த்தோம். அவர் இறப்பதற்கு முன்பாக 1 மாதம் படுத்த படுக்கையாக இருந்தார். அவருக்கு வியாதி எதுவும் இல்லை. எங்கள் சகோதரர்களுக்குள் எந்த சொத்தை பொறுத்தும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. கொலையனூர் ராஜாங்கம் மகன் பாலகிருஷ்ணனுக்கும், எனக்கும் எந்த விரோதமும் இல்லை. கருப்பையன் மகன் ராமசாமிக்கும், எனக்கும் எந்த விரோதமும் இல்லை. செல்லப்பெருமாள் மகன் நடராஜன் என்பவரை எனக்குத் தெரியாது. அம்பாபூர் கிராமத்தை சேர்ந்த ராமசாமிக்கும், எனக்கும் விரோதம் இல்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை...**

என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் இருக்கும் முதல் கையெழுத்து

என்னுடையது இல்லை. அந்த ஆவணத்தில் உள்ள 2வது கையெழுத்து யார் செய்துள்ளார் என்று எனக்கு தெரியவில்லை. 23.03.2007ம் தேதியில் எனது தாய் லோகாம்பாள், நான், மணிவண்ணன், சண்முகம், செல்வராசு ஆகியோர்களுக்குள் தாவா சொத்துக்களை பாகம் பிரித்து அதற்காக ஒரு பரிவர்த்தனை அட்டவணை எழுதிக் கொண்டோம் என்றும், அதன் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றும் சொன்னால் அவ்வாறு எழுதிக்கொள்ளவுமில்லை, ஆவணமும் என்னிடம் இல்லை. அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் எனது பாகத்தை விற்றுவிட்டேன் என்றால் சரிதான். வாதிகள் எனது மகன்கள் என்பதால் பொய்யாக ஒரு ஆதரவை ஜோடித்துக்கொண்டு எனது மகன்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனது மகன்களுக்கும், எனக்கும் சம்மந்தமில்லை. எனது மகன்களுக்கு எதிராக நான் செயல்படுவது இல்லை.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம், பி.காம், பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.